**ஊவா பரணகம பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

**1.** நிதிக்கூற்றுக்கள்

**1.1** நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 06 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**1.2** முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஊவா பரணகம பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3** முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் தொகை ரூபா 6,000,000 நிலையான வைப்பு ஆண்டின் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கு திருத்தப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்குரிய ரூபா 2,848,935 பெறுமதியான 03 கைத்தொழில்களிற்காகப் பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அத்தொகை கைத்தொழில் கடன் கொடுத்தோரினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | கணக்கு திருத்தப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (iii) | சபையில் தற்போது பௌதீக ரீதியில் காணப்படாத ரூபா 5,470,180 பெறுமதியான | கணக்கு திருத்தப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | அச்சுக்கல் தொகை ஒன்று மீளாய்வாண்டில் இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | | |
| (iv) | காணி மற்றும் கட்டடங்களின் பெறுமதி ரூபா 34,961,413 எனக் கண்டறியப்பட்டிருந்தா்லும் இறுதிக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்கு திருத்தப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

(ஆ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 362,626 பெறுமதியான கடன்பட்டோர் மீதி கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது. | கணக்காய்விற்கான சான்றுகள் கணக்குகளுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் கணக்கீட்டு ஆண்டில் கணக்குகளை சமர்ப்பிக்கும் போது அனைத்து சான்றுகளுடனும் கணக்குகளை தயாரிப்பதாகக் குறிப்பிடுகின்றேன். |

**1.4** இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| (i) | 150 ஆம் பிரிவு | சபை எல்லைக்குள் காணப்படும் கைத்தொழில்/ வர்த்தகம் என்பன தொடர்பாக ஆய்வொன்று நடாத்தப்பட்டு கைத்தொழில் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்வரும் நிதி ஆண்டில் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 126(vii) (ஈ) ஆம் பிரிவு மற்றும் 2017 திசம்பர் 08 ஆம் திகதிய 2049 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரம் | பிரதேச சபை சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தினுள் பொருத்தப்பட்டுள்ள விளம்பரப் பதாகை தொடர்பாக பரிசீலனை மேற்கொண்டு விபரங்களை பட்டியலிட்டு கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய மற்றும் வர்த்தமானிப் பத்திரத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்வரும் நிதி ஆண்டில் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 114 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 280,765 ஆகும். | முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டிலிருந்து உப கட்டு நிதியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

**2.** நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,487,110 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,967,366 ஆக இருந்தது.

**2.2** வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,519,540 | 2,910,964 | 2,242,372 | 668,592 | 2,269,540 | 2,812,020 | 2,674,918 | 756,897 |
| (ii) | வாடகை | 1,289,000 | 1,293,844 | 938,913 | 354,931 | 1,451,000 | 873,832 | 929,649 | 503,278 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 965,000 | - | | - | 700,000 | 40,000 | 980,280 | |
| (iv) | ஏனைய வருமானம் | 9,800,000 | 9,907,318 | 3,254,805 | 6,652,513 | 11,584,000 | - | 6,592,877 | 5,301,710 |
| | மொத்தம் | 14,573,540 | 14,112,126 | 6,436,090 | 7,676,036 | 16,004,540 | 3,725,852 | 11,177,724 | 6,561,885 |

## 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 14,112,126 தொகையான மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 7,676,036 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அது மொத்த சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 54 சதவீதம் ஆகும். | நிலுவை வருமானம் உடனடியாக அறவிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் அனைத்து நிலுவை வருமானத்தையும் அறவிட்டு முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாகக் காணப்படும் பெற வேண்டிய கடை வாடகை, நீர்க் கட்டணம், சந்தை வரி மற்றும் நிலுவையாகவுள்ள மூலதன நன்கொடை ரூபா 19,436,272 அறவிடப் பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | வருமானத்தை அறிவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 9,907,318 தொகையான வேறு வருமானத்தில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,652,513 தொகை சேகரிக்கப்படாதிருந்ததுடன் அது மொத்த சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 67 சதவீதமாகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) <u>நீதிமன்றத் தண்டப்பணம்</u> | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 21,310,525 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| (ஆ) <u>முத்திரைக் கட்டணம்</u> | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 5,751,596 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் "நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030" தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை தெளிவாக இனங் கண்டு, அவற்றை அளப்பதற்கான சுட்டிகளை இனங்கண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படாதிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கமைய செயலாற்ற வேண்டும் | எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும் |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) சபைக்குச் சொந்தமான கெப் வண்டிக்குரிய வாகன வருமான அனுமதிப்பத்திரத்தைக் காலதாமதமாகப் பெற்றுக் கொண்ட காரணத்தினால் 2018 ஆம் ஆண்டினுள் வருமான அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக் கொள்ளப்படும் போது ரூபா 32,670 பெறுமதியான தண்டப்பணம் | உரிய தினத்தில் வருமான அனுமதிப்பத்திரம் கொள்வனவு செய்யப்பட வேண்டும். | ஊரிய தண்டப் பணம் செலுத்துவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சபையின் அறிவுறுத்தலின் படி மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட வேண்டியிருந்தது. | | |
| (அ) | ஓராண்டிற்கு மேற்பட்ட இருந்து வரும் செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர், கைத்தொழில் கடன் கொடுத்தோர், வேறு கடன் கொடுத்தோர் மொத்தம் ரூபா 22,915,994 தொகை மீளாய்வாண்டிலும் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதி ஏற்பாடு கிடைத்தவுடன் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். |

**3.**3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 பதவிகளுக்குரிய மிகை பதவியணி 14 ஆகும். | ஆங்கீகரிக்கப்படாத பதவியணி அங்கீகரிக்கப்பட வேண்டும் | மிகை பதவிகள் அங்கீகரிக்கப்படுவதற்காக முகாமைத்துவ சேவை நிறுவனத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 பதவிகளுக்குரியதாக 02 வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணி வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும் | வெற்றிடமாகவுள்ள பதவியணியினரை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

3.4 பெறுகை செயற்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகை திட்டமொன்று தயாரிக் கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படும். |

## 04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அனைத்து ஆண்டுகளிலும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டிற்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் மட்டும் நடாத்தப்பட்டிருந்தன. | காலாண்டிற்கும் ஒரு தடவை வீதம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சபை கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒரு தடவை வீதம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சபை கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |